அவர்களுடைய பாடல். இந்தியாவில் இருக்கின்ற எல்லா தலைவர்களைக் காட்டிலும் மானுக்கு நிகரான, தலைசிறந்த தலைவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

இந்தக் கேள்வி எழுதிக் கொடுக்கப்பட்டு, இன்றுதான் அது எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான விடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று வாசித்திருக்கிறார்கள். ஆனால், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாகவே விதி 110-ன்கீழ் கங்கைகொண்டானில் மான் பூங்கா அமைத்துத் தரப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள். திருக்குறளில் 110-வது அதிகாரம் நன்றி என்கின்ற அதிகாரம். எனவே, எனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 445, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

445—

இரயில்வே மேம்பாலம்

***24728—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை சுங்கச் சாவடி பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 9]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை சுங்கச் சாவடி பகுதியிலுள்ள இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்களித்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நித்தம், நித்தம் துறைகளை ஆராய்ந்து, விதி 110-ன்கீழ் நல்ல பல திட்டங்களை அளித்துக் கொண்டிருக்கும் எங்கள் அற்புதமான தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) ஆராதனைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நேற்று முன்தினம் விதி 110-ன்கீழ் தொழில் துறையில் புரட்சியை ஏற்படுத்தும்வகையில் ஸ்ரீரங்கம் தொகுதியில் ரூ.1,200 கோடி செலவில் ஒரு காகித அட்டைத் தொழிற்சாலை துவக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தொழிற்சாலை அமையப் போவது ஸ்ரீரங்கம் தொகுதியாக இருந்தாலும்கூட, வறட்சிப் பகுதிகளைக் கொண்ட குளித்தலை தொகுதிக்கு அருகில் ஸ்ரீரங்கம் வருவதால் அந்தப் பகுதி மக்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கி, வாழ்வாதாரத்தைப் பெருக்கிட அது உதவும் என்ற வகையிலே அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேம்பாலம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை எவ்வாறு ஆராய்ந்தார்கள், எந்தத் துறையால் ஆராயப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. அப்பகுதியில் எப்பொழுது பார்த்தாலும் வாகனங்கள் அதிகமாகச் சென்றுகொண்டிருப்பதை நாங்கள் காண்கிறோம். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள்

அறிவித்திருக்கிற ரூ.1,200 கோடி செலவில் அமையவிருக்கும் தொழிற்சாலைகூட குளித்தலை, மணப்பாறை அருகிலேதான் அமையவிருக்கிறது. ஆகவே, போக்குவரத்து நெரிசல் இன்னும் அதிகமாகும் என்பதைக் கணக்கில்கொண்டு, மேம்பாலம் அமைப்பதற்கு இடமும் இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுகுறித்து ஆய்ந்து ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை சுங்கச் சாவடி பகுதியிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் இரயில்வே கடவு எண் 54 அமைந்துள்ளது. மேற்காணும் இரயில்வே கடவிற்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டதில் நாள் ஒன்றுக்கு, ஒரு இலட்சம் இரயில் வாகன அலகுகளுக்குக் குறைவாக 57,016 அலகுகள்தான் உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, தற்போது அப்பகுதியில் சாலை மேம்பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எவ்வாறு கணக்கிட்டு, அந்தப் பகுதியில் சாலை மேம்பாலம் அமைக்க முடியாத சூழ்நிலை இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்று தெரியவில்லை என்றார். இரயில்வே கடவு 24 மணி நேரத்தில் மூடப்பட்டிருக்கும் நேரங்களிலெல்லாம் இரயில்வே கடவுகளைக் கடப்பதற்கு காத்திருக்கும் வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அதனை சராசரி செய்தபின் ஒவ்வொரு வாகனத்திற்கும், அதற்கான புள்ளிகளை அளித்து அதன்படி நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் இரயில் வாகன அலகுகளுக்குமேல் இருக்கும் இரயில்வே கடவுகளில் மேம்பாலம், கீழ்ப்பாலம் கட்டுவதற்கு ஆகும் செலவினை மாநில அரசும், இரயில்வே அமைச்சகமும் சரிசமமாகப் பகிர்ந்துகொண்டு கட்டுவதற்கு இரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளிக்கின்றது. அதனுடைய அடிப்படையில்தான் இந்தப் பாலப் பணிகள் நடைபெறுகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கணக்கீட்டை இரயில்வே துறை மேற்கொள்கிறது. அதற்கு புள்ளிகள் கொடுக்கப்படுகின்றன.

2013 மே 9]

இரயில்வே கடவுகள் மூடப்படுகின்ற நேரங்களில் காத்துக்கிடக்கின்ற வாகனங்களுக்கு புள்ளிகள் அளிக்கப்படுகின்றன. 2 சக்கர வாகனங்களுக்கு 0.5 புள்ளியும், 3 சக்கர வாகனங்களுக்கு ஒரு புள்ளியும், சீருந்துகளுக்கு 3 புள்ளிகளும், கனரக வாகனங்களுக்கு 6 புள்ளிகளும் அளிக்கப்பட்டு அந்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஒரு இலட்சம் இரயில்வே வாகன அலகுகளுக்குமேல் இருந்தால்தான் அப்பகுதியில் இரயில்வே மேம்பாலமோ அல்லது கீழ்ப்பாலமோ அமைப்பதற்கு மத்திய இரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளிக்கின்றது. அதன் அடிப்படையிலேதான் மேம்பாலமும், கீழ்ப்பாலமும் கட்டப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆய்வுகளெல்லாம் எப்போது எடுக்கப்பட்டன என்பது தெரியவில்லை. அந்த Railway gate மூடியிருக்கும்போது எப்பொழுது பார்த்தாலும் கிட்டத்தட்ட 200 வாகனங்கள் தேங்கி நிற்பதை நாங்கள் பார்க்கிறோம். மேலும், அந்தப் பகுதியிலே அதிகமான இரயில்கள் விடப்பட்டிருப்பதாலும், அடிக்கடி gate மூடக்கூடிய நிலைமை இருப்பதாலும், மாநில அரசின் நிதியிலிருந்தாவது மேம்பாலம் அமைத்துத் தர முடியுமா என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், அதாவது, 2011-2012 ஆம் ஆண்டுகளிலே 14 இரயில்வே மேம்பாலங்களும், கீழ்ப்பாலங்களும் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல, 2012-2013 ஆம் ஆண்டில்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23 இரயில்வே மேம்பாலங்களும், கீழ்ப்பாலங்களும் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல, 2013-2014 ஆம் ஆண்டிலே 18 இரயில்வே மேம்பாலங்களும், கீழ்ப்பாலங்களும் கட்டுவதற்கு ஆணையிட்டு, அதாவது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து இந்த மூன்று ஆண்டுக் காலத்திலே 55 இரயில்வே மேம்பாலங்களும், கீழ்ப்பாலங்களும் கட்டுவதற்கு ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அந்தப் பணிகளெல்லாம் பல்வேறு நிலைகளிலே இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, மீண்டும் ஆய்வு செய்து, அந்த ஆய்விலே ஒரு இலட்சம் இரயில்வே வாகன அலகுகளுக்குமேல் இருக்கும்பட்சத்தில், நிதிநிலைக்கேற்ப அங்கே பாலம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் தெய்வமாக நாம் போற்றுகின்ற அன்னை தெரசா அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்தபோது "உங்கள் சேவை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்திய தேசத்திற்கே தேவை" என்று கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த தீர்க்கதரிசியின் வார்த்தையை மெய்ப்பிக்கும் வகையில் வருங்கால பாரதத்தை வளமையான பாரதமாக உருவாக்கும் ஆற்றல், திறமை, அறிவு பெற்ற எங்கள் தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, புளியம்பட்டி-பங்களாபுதூர் நெடுஞ்சாலையிலுள்ள பழுதடைந்த பவானி ஆற்றுப் பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2013 மே 9]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, நிதிநிலைக்கு ஏற்ப, எதிர்காலத்திலே ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 446, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

446—

புவி வெப்பமடைதல்

***25981—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவி வெப்பமடைதலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புவி வெப்பமடைதலைத் தடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி சுற்றுச்சூழல் துறையும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஊக்குவிப்பினால் அனைத்துத் தொழிற்சாலைகளும் தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு (Cleaner Technology) மாறியுள்ளதுடன், ஓசோனை சிதைக்கும் பொருட்களை உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் அதற்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி